Deposition of Witness

(Chapter XXIII code of Criminal Procedure)

In the court of Judicial Magistrate No.II,

Tindivanam.

**CASE No CC. 78 /2020**

**Prosecution witness – PW – 1**

| | | | |
|---|---|---|---|
| **Date :** | 01.09.2025 | | |
| **Name :** | சக்திவேல் | **Age :** | 53 |
| **Father/Husband Name:** | ஆறுமுகம் | **Calling :** | |
| **Village/City :** | முன்னூர் | | |
| **Taluk :** | | | |

A1,4 Present. A2, A3 Absent.Filed Petition.

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டஎதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை.</u>**

1.நான் எனது முதல் விசாரணையில் நான் சென்னையில் காய்கறி வியாபாரம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு நேரடியாக சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனை சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோதுதான் போலீசார் என்னிடம் வந்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் எனது புகார் வாக்குமூலத்தில் என்னை இரும்புராடால் தாக்கியதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் இரும்பு கடப்பாறை கம்பியால் தாக்கியதாக தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு செல்லும்போது என்னை தெரிந்த 6 நபர்கள் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியாக எனக்கு ஞாபகமில்லை. போலீசார் விசாரணையின் போது என்னை தெரிந்த 6 நபர்கள் தாக்கியதாக சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

2. கொரோனா சமயத்தில் ஒரு பிரச்சனை வந்தது என்று எனது குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் பக்கத்து வீடு ஆகும். சம்பவத்தின் போது அருகில் உள்ள நபர்கள் யாராவது வந்து மறித்தார்களா என்றால் இல்லை. புகாரில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக யாரையாவது குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நான் நிரந்தரமாக சென்னையில் வசித்து வந்து நான் காய்கறி வியாபாரம் செய்து வந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் எந்த பகுதியில் தங்கி இருந்தேன் என்றால் பூந்தமல்லி பகுதியில் தங்கியிருந்தேன். ஏற்கனவே விபத்து ஏற்படும் எனக்கு காயம் உள்ளது என்றால் சரிதான். நான் முன்விரோதம் காரணமாக ஆஞ்சநேயர் எதிரிகள் மீது பொய்யாகப் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் உண்மையிலேயே சம்பவம் 24ம் தேதி நடந்திருந்தால் அதை பொறுத்து அன்றைய தினமே புகார் கொடுத்து இருப்பேன் என்றாலும் நான் ஒரு பொய்யான புகாரை எதிரிகள் மீது கொடுத்துள்ளேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும்

சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியில்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.

Deposition of Witness

(Chapter XXIII code of Criminal Procedure)

In the court of Judicial Magistrate No.II,

Tindivanam.

**CASE No CC. 78/2020**

**Prosecution witness – PW – 2**

| | | | |
|---|---|---|---|
| **Date :** | 01.09.2025 | | |
| **Name :** | **லோகநாயகி** | **Age :** | 37 |
| **Father/Husband Name :** | சத்யன் | **Calling :** | |
| **Village/City :** | **முன்னூர்** | | |
| **Taluk :** | | | |

A1,4 Present. A2, A3 Absent.Filed Petition.

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை.</u>**

1. எனது முதல் விசாரணையில் சம்பவத்தை நான் தூரத்தில் இருந்து எனது அடிப்படையிலிருந்து பார்த்தேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதன்பின்பு சத்தம் கேட்டு தான் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல நான் பக்கத்தில் இருந்து தான் பார்த்தேன். சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் பக்கத்தில் தான். எங்கள் பகுதியில் சுமார் பத்து வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தை பார்த்தவர்கள் யாராவது சண்டையை மரித்து விட்டார்களா என்றால் இல்லை நானும் எனது பசங்களும் தான் மறித்தோம். எனது கணவரை

மருத்துவமனைக்கு கொண்டு யார் சேர்த்தார்கள் என்றால் நான் தான் அழைத்து சென்று சேர்த்தேன். நான் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். எனது கணவரை மருத்துவமனையில் சேர்க்கும்போது எனது ஊர்க்காரர்கள் யார் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை.

2. மருத்துவமனையில் சம்பவத்தை பற்றி மருத்துவர் விசாரணை செய்யும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். மருத்துவர் விசாரணை செய்யும் போது யார் யார் எத்தனை நபர்கள் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்ற விவரத்தை சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். மருத்துவர் விசாரணை செய்யும் போது நானும் உடன் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரிந்த ஆறு நபர்கள் அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் என்ன விசாரணை செய்யும் போது நான்கு நபர்கள் தாக்கியதாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் இரும்பு ராடால் அடித்ததாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் விசாரிக்கும் போது இரும்பு கடப்பாறை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் இரும்பு ராடால்தான் அடித்தார்கள். கொரோனாவுக்கு முன்பு எனது கணவர் சென்னையில் காய்கறி கடையில் வேலை செய்து வந்தாரா என்றால் வேலை செய்து வந்தார். எங்கு தங்கி வேலை செய்து வந்தார் என்றால் போரூரில் தங்கி வேலை செய்து வந்தார். போரூரில் தங்கி வேலை செய்து கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 15 ஆண்டுகளுக்கு முன்பு காயம் ஏற்பட்டது, அந்த காயம் வேறு இந்த காயம் வேறு.

3. இந்த வழக்கின் சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக 27.05.2020 க்கு முன்பு பிரச்சனை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். யார் யார் எந்த ஆயுதத்தால் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு

முழுமையாக தெரியாது என்றால் கலியபெருமாள் அடித்தது மட்டும் எனக்கு தெரியும். வேறு யார் ஏதனால் தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த புகார் ஆனது எங்களுக்கும் எதிரிகளுக்கும் இருந்த முன் விரோதம் காரணமாக எனது கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது இருந்தால் முன் விரோதம் காரணமே ஏற்கனவே ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல காயம் பட்டு தலையில் பார்த்து தையல் போடப்பட்டுள்ளது. மேற்படி விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். மருத்துவமனையில் போலீசார் விசாரணை செய்யும் போது மேற்படி விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் உண்மையிலேயே நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் போலீஸ் விசாரணையில் சம்பவம் குறித்து தெளிவாக சொல்லி இருப்பேன் என்றாலும் அதான் காரணம் ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் நான் கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் தனது புகாரில் எனது மனைவியும் அசிங்கமாக திட்டினார் என்று குறிப்பிட்டு தான் புகார் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.

Deposition of Witness

(Chapter XXIII code of Criminal Procedure)

In the court of Judicial Magistrate No.II,

Tindivanam.

**CASE No CC. 78/2020**

**Prosecution witness – PW – 5**

| | | | |
|---|---|---|---|
| **Date :** | **01.09.2025** | | |
| **Name :** | **விநாயகம்** | **Age :** | **61** |
| **Father/Husband Name :** | முத்துசாமி | **Calling:** | |
| **Village/City :** | **திண்டிவனம்** | | |
| **Taluk :** | | | |

A1,4 Present. A2, A3 Absent.Filed Petition.

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை.</u>**

1. புகாரிடம் மருத்துவமனைக்கு சென்று தான் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் 28.05.2020 ஆம் வருடம் 11:30 மணி அளவில் தகவல் வந்தது. நான் மருத்துவமனைக்கு சென்று இன்டிமேஷனை வாங்கி பார்த்தேன் என்றால் சரிதான். 27.05.2020 ஆம் தேதி இரவு 10:40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மறுநாள் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் தகவல் எனக்கு 28.05.2020 ஆம் தேதி தான் தகவல் கொடுக்கப்பட்டது நான் உடனே மருத்துவமனைக்கு சென்றேன். அந்த இன்டிமேஷனில் அடையாளம் தெரிந்த ஆறு நபர்கள் இரும்பு கடப்பாறையால் தாக்கியதாக தான் இருந்தது

என்றால் சரிதான். அந்த இன்டிமேஷனில் தடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை பார்வையிட்டு தான் காயம் பட்டன் அவரிடம் இருந்து வாக்குமூலம் பெற சென்றேன் என்றால் சரிதான்.

2. புகார்தாரர் என்னிடம் வாக்குமூலம் கொடுக்கும் போது நான்கு நபர்கள் இரும்பு ராடால் தாக்கியதாக தான் சொன்னார் என்றால் சரிதான். நான் புகார் தாரரிடம் விபத்து பதிவேட்டில் ஆறு பேர் என்று சொல்லிவிட்டு தற்போது ஏன் நான்கு பேர் என்று சொல்கிறார் என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டேன் அவர் பதட்டத்தில் ஆறு பேர் அடித்ததாக சொன்னதாகவும் ஆனால் நான்கு பேர்தான் தன்னை தாக்கியதாகவும் என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி விபரங்களை நான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று சரிவர விசாரணை செய்யாமல் நான் தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக வழக்கு பதிவு செய்தாலும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தாலும் மருத்துவ ஆவணத்தின் அடிப்படையில் தான் தாக்கல் செய்வார்கள் என்றால் சரியல்ல, காயத்தின் தன்மை பொறுத்து மட்டும் தான் மருத்துவ ஆவணங்களை பயன்படுத்துவார்கள். சம்பவம் நடந்த 27.08.2020 இன்று எனக்கு முறையாக தகவல் வந்துவிட்டது என்றாலும் நான் உடனடியாக சென்று வாக்குமூலம் பதிவு செய்யாமல் மறுநாள் சென்று தவறுதலாக ஒரு வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. புகாரிடம் வாக்குமூலம் வாங்கும் போது உடன் இருந்து அவரது மனைவியிடம் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. நான் எழுதிய புகார் வாக்குமூலத்தில் தான் அவர் கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் நான் படித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார். நாங்களாகவே புகார்

வாக்குமூலத்தை தயார் செய்து கொண்டு அவரிடம் கையொப்பம் மட்டும் வாங்கிக் கொண்டோம் என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.